# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 39/2016

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 27.02.2023**

**பெயர் - சுமித்ரா என்கிற டில்லியம்மாள்**

**க/பெ - சேகர்**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 11.18 a.m.**

**குறுக்கு விசாரணை -**

2. நான் இந்த வழக்கை யார் யார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் முத்தம்மாள், சண்முகம், சீயாளன், தெய்வசிகாமணி மற்றும தனபால் மீது தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது நிலம் எங்களுக்கு வேண்டும் என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் விஸ்தீரணம் என்னவென்றால் 1.36ஏக்கர் ஆகும். அதன் புல எண் என்னவென்றால் 2841 ஆகும். எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் தனபால் எனது கணவரை அடிக்க எங்களது நிலத்திற்கு வந்ததால் வழக்கு தாக்கல் செய்தேன். தாவா சொத்து எங்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் கோபால் ரெட்டியிடம் இருந்து ரங்கனாதன் வாங்கினார். நாங்கள் ஜமுனா ராணி என்பவரிடம் இருந்து மேற்படி சொத்தை கிரையம் பெற்றோம். நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் இதற்கு முன் நடந்த ஒரு வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை செல்லாது என நான் இவ்வழக்கில் பரிகாரம் கேட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி தீர்ப்புரையின் நகலையும் இவ்வழக்கில் வாசா ஆ 7 ஆக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. மேற்படி வழக்கில் நான் தரப்பினரா என்றால் இல்லை. எனக்கு தாவா சொத்தினை

கிரையம் கொடுத்த ஜமுனா ராணி மேற்படி வழக்கில் தரப்பினரா என்றால் தெரியாது. ஜமுனா ராணிக்கு ரங்கனாத நாயுடு தாவா சொத்தினை விற்றதாக நான் எனது வழக்கில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ரங்கநாத நாயுடுக்கு ராஜகோபால் ரெட்டி தாவா சொத்தினை விற்றதாக நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ராஜகோபால் ரெட்டி மற்றும் ரங்கநாத நாயுடு ஆகியோர் மேற்படி முந்தைய வழக்கில் முதல் மற்றும் மூன்றாம் பிரதிவாதியாக உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வழக்கு இவ்வழக்கின் 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். எனது வழக்கில் ராஜகோபால் ரெட்டி தாவா சொத்தினை 1954ல் கிரையம் பெற்றதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் கூறும் ராஜகோபால் ரெட்டி, தனபால் ரெட்டி, சுப்பிரமணிய ரெட்டி, மற்றும் எட்டியப்ப ரெட்டி ஆகியோர் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான்.

4. நான் தாக்கல் செய்துள்ள மேற்படி தீர்ப்பானையில் யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்தது அது எதற்காக தாக்கல் செய்யப்பட்டது அதில் என்ன தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டது என்று நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக் கொண்டேன். மேற்படி வழக்கில் தனபால் ரெட்டி வகையரா மேற்படி தாவா சொத்து ராஜகோபால் ரெட்டி மீது கிரையம் பெற்று இருந்தாலும் அது அவரது தனிப்பட்ட சொத்து அல்ல என்றும் கூட்டு குடும்ப சொத்து என்றும் தெரிவித்துள்ளனர் என்றால் சரிதான். நான் கூறிய் 2841 என்ற எண்ணானது புல எண் கிடையாது என்றும் பட்டா எண் என்றும் தாவா சொத்தின் பழைய புல எண் 175 என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சர்வே எண் 177/1, 176, மற்றும் 175 ஆகிய புல எண்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 177/1 மற்றும் சர்வே எண் 176 ஆகியவை இவ்வழக்கில் சம்மந்தப்படவில்லை என்றால் சரிதான்.

5. ராஜகோபால் ரெட்டி 1954ல் சர்வே எண் 175ல் பூரா விஸ்தீரணம் 3.59 ஏக்கரில் 2.50 ஏக்கர் மட்டுமே கிரையம் பெற்று இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் சர்வே எண் 175ல் அடங்கிய 2.50 ஏக்கர் நிலமும் மற்ற இரு சர்வே எண்களில் அங்கிய நிலங்களும் 4 சகோதர்களுக்கு வாய்மொழியாக சமமாக பிரிக்கப்பட்டு இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குறிப்பாக மேற்படி சர்வே எண் 175ல் அடங்கிய 2.50 ஏக்கர் நிலத்தை நான்கு சகோதரர்களும் 62.50 ஏக்கர் நிலமாக பிரித்துக்கொண்டதாக கூறினர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தனபால் ரெட்டி தனது

பாகத்திற்கு வந்த நிலங்களை அவரது மனைவி மற்றும் மக்களுக்கு 21.10.1993ல் அன்று செட்டில் மென்ட் பத்திரம் எழுதிவைத்ததாக கூறினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாவா சொத்து சம்மந்தமான நான் ராஜகோபால் ரெட்டியை சந்தித்து ஏதேனும் விளம்பியுள்ளேனா என்றால் இல்லை.

6. தனபால் ரெட்டியார் 1993ல் எழுதிய செட்டில் மென்ட் பத்திரத்தில் ராஜகோபால் ரெட்டி சாட்சி கையொப்பம் போட்டதாக மேற்படி வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நான்கு சகோதரர்களுக்குள் மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்ப்பட்டதால் தான் ராஜகோபால் ரெட்டி 1993ல் ஏற்ப்பட்ட செட்டில் மென்ட் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 2.50 ஏக்கர் நிலத்தினை 4 பாகமாக மேற்கில் இருந்து கிழக்காக பிரிக்கும் போது மேற்கில் இருந்து கிழக்காக மூன்றாம் பாகம் 62.50 சென்ட் நிலம் தனபால் ரெட்டிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தனபால் ரெட்டி சிம்சன் கம்பெனியில் வேலை பார்த்து சென்னையில் வசித்து வந்தார் என்றால் அவரை எனக்கு தெரியாது அவரை நான் பார்த்ததில்லை. அவர் சென்னையில் வசித்த காரணத்தினால் அவரது சகோதரரான சுப்பிரமணி ரெட்டியிடம் தனது நிலத்தினை ஒப்படைத்து பராமரித்து வரும்படி நிலத்தை ஒப்படைத்ததாகவும் அதன் படி மேற்படி சுப்பிரமணிய ரெட்டி நிலத்தினை பராமரித்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. எனது பெயரில் வாங்கப்பட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகலினை வாசா ஆ 4 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதன் அசல் ஆவணம் எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. ஜமுனா ராணி சொத்தை வாங்கியதாக வாசா ஆ 2ன் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதன் அசல் என்ன ஆனது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராங்கநாத நாயுடு ராஜகோபால் ரெட்டியிடம் கிரையம் பெற்றதாக கூறி அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகலாக வாசா ஆ 1யை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதன் அசல் ஆவணம் என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. மேற்படி மூன்று ஆவணங்களின் அசல் ஆவணங்களும் என்ன ஆனது என்று எனது வழக்கில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

8. நான் வழக்கு சொத்தை கிரையம் பெறும்போது விள்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன் வில்லங்கம் இல்லாததால் சொத்தை வாங்கினேன். அது போல்

வில்லங்கம் போட்டு பார்த்ததாக நான் கூறும் நிலையில் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதே போல் எனக்கு சொத்தை விற்ற ஜமுனா ராணியோ அல்லது ராங்கநாத நாயுடுவோ அவர்கள் மேற்படி சொத்தினை வாங்குவதற்கு முன்னர் அந்த சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ரங்கநாதநாயுடு சொத்து குறித்து வில்லங்க சான்றிதழ் பெற்றதாக எந்த குறிப்பும் நான் இந்த வழக்கில் தெரிவிக்கவில்லை என்றும் ரங்கநாதனும் மேற்படி வழக்கில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் வாசா ஆ 1ன் முன்னிலையில் ராஜகோபால் ரெட்டி ரங்கநாத நாயுடுக்கு கிரையம் கொடுத்த நிலங்கள் சுப்பிரமணிய ரெட்டி மற்றும் தனபால் ரெட்டி ஆகியோர் பாகங்களையும் உள்ளடக்கியது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் தான் மேற்படி வாசா ஆ 1 ஆவணத்தில் சுப்பிரமணிய ரெட்டி சாட்சி கையொப்பம் இட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் பழைய வழக்கில் தீர விசாரணை செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்ட விவரங்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. நான் உரிமை கோரும் ஜமுனா ராணி அவருக்கு கிரையம் கொடுத்த ரங்கநாத நாயுடுவும் அவருக்கு கிரையம் கொடுத்த ராஜகோபால் ரெட்டியும் வாசா ஆ 7 ஆவணத்தின் தீர்ப்பு வழக்கில் தரப்பினர்கள் என்பதால் அந்த தீர்ப்பு என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பின் முன்னிலையில் தனபால் ரெட்டி இதே நீதிமன்றத்தில் அவரது சொத்தினை சுவாதீனம் எடுத்துக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதுபோல் அவர் சுவாதீணம் எடுத்த நிலத்தில் நானும் எனது கணவரும் பொய்யாக ஆவணம் தயார் செய்து அவரது நிலத்தில் அத்துமீறி நுழைந்தோம் என்றால் சரியல்ல.

10. வாசா ஆ 3 பட்டா, நானாக ஏற்ப்படுத்திக்கொண்ட ஆவணம் என்றும் அது 1 முதல் 5 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. ராஜகோபால் ரெட்டியிடம் இருந்து ரங்கநாத நாயுடுக்கு 1.25 ஏக்கர் நிலம் கிரையம் பெற்றார் என்றும் ரங்கநாத நாயுடுவிடம் இருந்து ஜமுனா ராணிக்கு 1.25 ஏக்கர் நிலம் கிரையம் பெற்றார் என்றும் நான் மேற்படி ஜமுனா ராணியிடம் இருந்து எவ்வாறு 1.36 ஏக்கர் நிலம் கிரையம் பெற்றேன் என்றால் எனக்கு தெரியாது. பிரதிாவாதிகள் நாங்கள் அவரது சொத்தில் அத்துமீறி நுழைந்த காரணத்தினால் அவர்களது சொத்தை காலி செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த வழக்கில்

எதிர் பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11. இது சம்மந்தமாக பிரதிவாதிகள் அவரது பதில் உரையை திருத்திய பிறகு நான் அதற்கு மறுப்பு பதில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் நான் தாக்கல் செய்த பிரமான வாக்குமூலத்திலோ அல்லது கூடுதல் பிரமான வாக்குமூலத்திலோ எதிர்பரிகாரம் குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் 1.36 ஏக்கர் நிலம் இல்லை என்றும் உண்மையில் அது 1.25 ஏக்கர் நிலம் என்றும் அதில் கிழக்கு புறம் உள்ள 62.50 சென்ட் நிலம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றும் அதை காலிசெய்து ஒப்படைக்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம்- 12.06 p.m.**